**01.04.2025**

**C.C. No. 117/2023**
எ.**சா. 1 சுரேஷ்**

<u>குறுக்கு விசாரணை</u>

1) ம.சா.ஆ.5 வழக்கறிஞர் அறிவிப்பை 15.07.2023 ல் பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பை ம.சா.ஆ.5 ஆவணத்தில் உள்ள அஞ்சலக ஒப்புதல் அட்டையில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி அறிவிப்பு எனது வீட்டு முகவரிக்கும் அலுவலக முகவரிக்கும் அனுப்பப்பட்டது என்றால் வீட்டு முகவரிக்குதான் அனுப்பப்பட்டது. எனது இரண்டு முகவரிக்கும் அனுப்பப்பட்டு அதற்கான ஆவணங்கள் உள்ளது என்றால் சரிதான். புகார்தாரர் ம.சா.ஆ.1 ஆவணமான கடனுறுதிசீட்டை 26.07.2021 ல் நான் எழுதிக்கொடுத்தாக சொல்லி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எ.சா.ஆ.2 ஆவணம் 12.01.2022 ல் எழுதப்பட்டுள்ளதாக கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி எ.சா.ஆ. 2 ஆவணம் எழுதுவற்கு முன்பு நான் பொன்நகரில் வசித்து வந்தேன் என்றால் சரிதான்.

2) மேற்படி எ.சா.ஆ.2 ஆவணமான வாடகை ஒப்பந்தந்திற்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.1 எழுதிய காலத்தில் எ.சா.ஆ.2 ல் கண்டுள்ள முகவரியில் நான் வசிக்க வில்லை என்றால் சரிதான். 2022 முதல் எ.சா.ஆ.2 குறிப்பிட்டுள்ள முகவரில் வசித்து வருகிறேன். எனக்கு பார்வை குறைபாடு பிறவியிலிருந்து உள்ளதா என்றால் இல்லை கல்லூரி படிக்கும் போது ஏற்பட்டது. நான் கல்லூரியில் மாணவர்களுக்கு பாடம் நடத்தும்போது ஏற்கனவே நான் படித்த பாடங்களை நினைவு கூர்ந்தும், பிறர் படிக்க கேட்டும்தான் பாடம் நடத்துவேன் என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் எந்தஎந்த தேதியில் எந்த எண் கொண்ட காசோலையை கொடுத்து கடன் வாங்கினேன் என்றால் 2018 ல் பூர்த்தி செய்யப்படாத காசோலையை கொடுத்துதான் கடன் வாங்கினேன். காசோலை எண் நினைவில்லை.

3) நான் நினைவு கூர்ந்து பாடங்களை மாணவர்களுக்கு நடத்தும் திறன் உள்ளவன் என்றாலும் ஆனால் வழக்கிற்காக நினைவில்லை என்று பொய்யாக கூறுகிறேன்

என்றால் சரியல்ல. புகார்தாரரின் கணவரிடம் ரூ. 10 ஆயிரம், 20 ஆயிரம் கடன் பெற்றுக்கொண்டு அதற்காக பூர்த்தி செய்யாத காசோலையை கொடுத்தேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பூர்த்தி செய்யாத காசோலையை அவரது கணவரிடம் கொடுத்தேன். எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு வந்தபின்பு எனது காசோலையை சட்ட விரோதமாக பயன்படுத்தியுள்ளனர் என்று நான் காவல்துறையில் புகார் அளித்தேனா என்றால் இல்லை நான் புகார்தாரரிடம் சென்று காசோலையை திரும்ப கேட்டபோது வழக்கறிஞரிடம் இருப்பதாகவும் திரும்ப பெற்றுதருவதாகவும் கூறினார்.

4) நான் பல்கலைகழக சொசைட்டியில் லோன் வேண்டி மனு செய்துள்ளேன் என்றால் சரிதான். எவ்வளவு தொகை என்றால் ரூ.5 லட்சத்திற்கு மனு செய்துள்ளேன். 10.09.2024ம் தேதியின்று நானும் எனது மனைவியும் புகார்தாரரை சென்று சந்தித்தோம் என்றால் சரியல்ல. மேற்படி தேதியில்நான் புகார்தாரரை சந்தித்துவிட்டு பொய்யாக இல்லை என்று மறுக்கிறேன் என்றால் சரியல்ல. என் தகப்பனார் பெயர் எம்.சொக்கலிங்கம். என் தாத்தா பெயர் முனியாண்டி. எனது பூர்வீக ஊர் சிவகங்கை மாவட்டம், சாத்தரசன்கோட்டை அஞ்சல் பொன்னளி கிராமம். மேற்படி கிராமத்தில் எனது தகப்பனாருக்கு நன்செய் நிலம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி நிலம் காளையார்கோவில் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 646/1997 என்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது சகோதரர் பெயர் சி. மகேந்திரன். எனது சகோதரரும் எனது தகப்பனாரின் முகவரியில் வசித்து வருகிறார் என்றால் சரிதான்.

5) எனது சகோதரர் கிரையம் பெற்ற சொத்தும் காளையார்கோவில் சார்பதிவாளர் அலுவலகத்தில் 97/2019 என்ற ஆவண எண்ணில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் மேற்படி 2 சொத்துக்களின் அசல் ஆவணங்களையும் 10.09.2024 அன்று புகார்தாரரிடம் கொடுத்து சொசைட்டி லோன் ஏற்பாடு செய்துள்ளதாகவும், நீதிமன்றத்தில் உள்ள 2 காசோலைகளுக்கும் உண்டான தொகையை திருப்பி கொடுத்துவிட்டு மேற்படி அசல் ஆவணங்களை திருப்பி பெற்றுக்கொள்வதாக

கூறினேன் என்றால் சரியல்ல. நான் இரண்டு அசல் ஆவணங்களையும் கொடுக்கவில்லை. மேற்படி ஆவணங்களை வைத்து லோன் பெற முயற்சி செய்யவும் இல்லை. மேற்படி **ஆவணங்களின் நகல் முறையே ம.சா.ஆ. 6 மற்றும் ம.சா.ஆ. 7 ஆகும்.**

6) என் மனைவி பெயர் எஸ். பானுப்பிரியா. என் மனைவி பெயரில் பானுப்பிரியா மைக்ரோ பைனான்ஸ் என்ற பெயரில் பைனான்ஸ் நிறுவனம் நடத்தினேன் என்றால் சரியல்ல. பானுப்பிரியா மைக்ரோ பைனான்ஸ் என்ற பெயரில் பைனான்ஸ் அனுமதி பெறாமல் நிறுவனம் நடத்தி அதன் மூலம் தொகை கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக காவல் துறையில் எத்தனை புகார் வந்தது என்றால் நான்தான் புகார் கொடுத்தேன். யார் யார் மீது புகார் அளித்தேன் என்றால் அதை இங்கு சொல்லவேண்டிய அவசியமில்லை. என் மீது அழகப்பாபுரம் காவல் நிலையத்தில் புகார் இருந்தது என்றாலும் அதை மறைத்து நான்தான் புகார் அளித்தாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்நீதிமன்றத்தில் என் மீது எத்தனை காசோலை வழக்குகள் உள்ளது என்றால் இது தவிர 2 காசோலை வழக்குகள் உள்ளது.

7) நான் சில நபர்களிடம் கடன் பெற்றுக்கொண்டு கடனை திருப்பி செலுத்தாமல் நான் அழகப்பாபுரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் பணத்தை திருப்பி இருமடங்கு வட்டி கட்டியதால் பணம் கேட்டு தொந்தரவு செய்வதாக புகார் அளித்தேன். எனது முதல் விசாரணையில் ரூ.1 லட்சம் சம்பளம் பெறுதாகவும் அதனால் யாரிடமும் கடன் பெறவேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரியல்ல. ஏற்கனவே பெற்ற கடன். கடந்த 5 ஆண்டுகளாக யாரிடமும் கடன் பெறவும் இல்லை, கொடுக்கவும் இல்லை. நான் ஏற்கனவே பெற்ற கடன்களுக்கு மேலதிகாரியின் அனுமதி பெற்றேனா என்றால் அனுமதி பெற்றுள்ளேன். மேற்படி அனுமதி பெற்றதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இனிமேலும் அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்ய இயலாது.

8) நான் கடன் பெற பல்கலைகழகத்தில் அனுமதி பெறவில்லை என்றாலும், நான்

புகார்தாரரைப்போன்று பல நபர்களிடம் பணம் பெற்றுக்கொண்டு ஏமாற்றியிருக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் கடன் பெற்றுக்கொண்டு எனக்குள்ள பார்வை குறைபாட்டை சாதகமாக பயன்படுத்திக்கொண்டு புகார்தாரரை ஏமாற்றியிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் புகார்தாரரிடம் 16.07.2021, 26.07.2021 தேதிகளில் புகார்தாரர் வீட்டில் வைத்து ரூ. 5 லட்சத்தை எனது மனைவி நடத்திவரும் தொழில் தேவைக்காவும், எனது தேவைக்காவும் கடனாக பெற்றுக்கொண்டு மேற்படி ரூ5 லட்சத்திற்கு 26.07.2021ம் தேதியில் ம.சா.ஆ.1 ஆவணத்தை சாட்சிகள் முன்னிலையில் எழுதிக்கொடுத்துவிட்டு தற்போது வழக்கிற்காக கடனுறுதிசீட்டு எழுதிக்கொடுக்கவும் இல்லை, கடனும் வாங்கவில்லை என்று பொய்யாக கட்சி செய்கிறேன் என்றால் சரியல்ல.

9) கடனுறுதிசீட்டில் உள்ள சாட்சிகளை விசாரித்தால் உண்மை நிலவரம் தெரியவரும் என்றால் சாட்சிகளை யார் என்று எனக்கு தெரியாது. மேற்படி ஆவணத்தில் உள்ள சாட்சிகளை தெரியும் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. நான் புகார்தாரரிடம் கடன் பெற்றுக்கொண்டு வழக்கு காசோலையையும், இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள சி.சி. 116/2023 வழக்கு காசோலை தொகையையும் மோசடிசெய்யவேண்டும் என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எ.சா.ஆ.1, 2 ஆவணங்கள் இவ்வழக்கிற்காக பின் யோசனையின் பேரில் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் புகார்தாரிடம் பெற்ற கடனை திரும்ப செலுத்த கடமைபட்டவன் என்றால் சரியல்ல. நான் புகார்தாரரிடம் கடன் பெறவில்லை. புகார்தாரிடம் பெற்ற கடனை தீர்ப்பதற்காக ம.சா.ஆ. 6, 7 ஆவணங்களை கொடுத்து 2 வழக்கு காசோலை தொகையையும் திரும்ப பெற்றுக்கொள்வதாக கூறிவிட்டு தற்போது இல்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா , **B.Sc., B.L., (Hon's)**)
விரைவு நீதிபதி காரைக்குடி